| | |
|---|---|
| | ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 |
| | மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)<br>Third Term Exam 2022 (2023) |
| | சைவநெறி தரம் 10 / Saivanery Grade 10 / நேரம் 2 மணித்தியாலம் / Time 2 Hours<br>Class............................................... Index No.................................. |

**பகுதி I**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) ஆன்மாக்களை மலபந்தத்திலிருந்து முற்றாக நீக்கி, அவற்றுக்கு பேரின்பத்தைக் கொடுக்கும் நிலை
   1. படைத்தல் 2. காத்தல் 3. மறைத்தல் 4. அருளல்

2) "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்" என கூறியவர்
   1. விவேகானந்தர் 2. ஆறுமுகநாவலர்
   3. ஔவையார் 4. விபுலானந்தர்

3) அட்டாங்க யோகங்களுள் முதலாவது
   1. இயமம் 2. நியமம் 3. தூய்மை 4. தன்வயத்தனாதல்

4) நிறைமதியை பூரணையை இறுதிநாளாகக் கொண்டு மாதத்தை கணிக்கும் முறை
   1. சந்திர மானம் 2. சூரியமானம்
   3. பூர்ணிமாந்த முறை 4. அமாந்த முறை

5) சூரிய உதயம் முதல் அடுத்தநாள் சூரிய உதயம் வரையான காலப்பகுதியை ஒரு நாள் என கணிப்பிடுவது
   1. இந்துமதம் 2. கிறிஸ்தவமதம் 3. இஸ்லாம் மதம் 4. பொது

6) ஐப்பாசி மாதம் அமாவாசையை அடுத்த பிரதமை முதல் சஷ்டி வரை அனுஷ்டிக்கப்படும் விரதம்
   1. விநாயகர் சஷ்டி 2. கேதார கௌரிவிரதம்
   3. நவராத்தரி விரதம் 4. கந்தசஷ்டி

7) நல்லவர்களைக் காத்து தீயவர்களை அழிக்கவும் தர்மத்தை நிலைநாட்டவும் காலந்தோறும் நான் தோன்றுகிறேன் என்று கூறியவர்
   1. கிருஷ்ணர் 2. வீரப்புதிரர்
   3. முருகன் 4. கண்ணகி அம்மன்

8) வேதங்கள் இறைவனால் அருளப்பட்டவை . மனிதனால் படைக்கப்படாதவை அதனால் அவற்றை
   1. எழுதா மறை 2. அபௌர்ஷேயம் 3. சுருதி 4. ரிஷ

9) நீண்ட ஆயுள், செல்வம், நோய்நீக்கம், பணநீக்கம் முதலானவற்றை தரவல்ல மாத்திரங்களின் தொகுப்பான அமைவது,
   1. இருக்கு வேதம் 2. யசுர்வேதம்
   3. சாமவேதம் 4. அதர்வணவேதம்



kalvi.lk

10) சுந்தர் வலக்கண் பார்வை பெற்ற தலம்
1. திருவாரூர் 2. திருவாமூர் 3. திருப்புன்கூர் 4. சீர்காழி

11) திருவிரட்டை மணிமாலையை பாடியவர்,
1. திருமூலர் 2. சேந்தனார் 3. சேக்கிழார் 4. கபிலதேவர்

12) இறைவனின் ஐந்தொழில்களில் சூர்ணோற்சவம் உணர்த்துவது,
1. படைத்தல் 2. அழித்தல் 3. மறைத்தல் 4. அருளல்

13) திருநாவுக்கரசர், பாண்டியமன்னனின் அழைப்பை மறுத்துரைத்து பாடிய பாடல்
1. குனித்த புருவமும்……………… 2. ஒற்றுமை வேற்றுமை………
3. நாமார்க்கும் குடியல்லோம ………… 4. மீளா அடிமை …………..

14) ஆணவம் வலியிழந்து, ஆன்மா மலநீக்கம் பெறுதல் பொருட்டு இடம்பெறும் திருவிழா,
1. கொடியேற்றம் 2. கொடியிறக்கம்
3. தேர்த்திருவிழா 4. வாகனத்திருவிழா

15) திருஞானசம்மந்தர், திருக்கோலக்கா எனும் திருப்பதியை அடைந்து கையினால் தாளமிட்டு பாடிய பதிகம்?
1. சதுரம் மறை 2. வாழ்க அந்தணர்
3. மந்திர மாவது நீறு 4. மடையில் வாளை

16) தாசமார்க்கத்தை கடைப்பிடித்த நாயானார்,
1. திஞானசம்மந்தர் 2. திருநாவுக்கரசர்
3. சுந்தரர் 4. மாணிக்கவாசர்

17) சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினால் நிறுவப்பட்ட முதல் பாடசாலை
1. வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை
2. சிவானந்தா வித்தியாலயம்
3. யாழ் இராமநாதன் கல்லூரி
4. மாதகல் விக்னேஸ்வரா கல்லூரி

18) இலக்ண சுந்தரி எனும் அரசி இழந்த அனைத்து செல்வத்தையும் மீளப்பெறுவதற்கு கடைப்பிடித்த விரதம்,
1. கந்தசஷ்டி 2. விநாயக சஷ்டி
3. கேதார கௌரி விரதம் 4. சிவராத்தி விரதம்

19) இலங்கையில் மிக உயரமான கொடித்தம்பம் இருக்கும் ஆலயம்
1. களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்
2. நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்
3. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்
4. நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்

20) சேத்திர பாலகர் என்ற நாமத்தை கொண்டவர்,
1. வைரவர் 2. வீரபத்திரர்
3. கஜமுகாசுரன் 4. மணிநாகன்

21) யாவரும் வழிபடுவதற்காகத் திருக்கோயில்களின் நிலையாக தாபிக்கப்படுவது,
1. இட்டலிங்கம் 2. ஆன்மார்த்த லிங்கம்
3. பரார்த்த லிங்கம் 4. சிவலிங்கம்



kalvi.lk

22) சைவசித்தாந்தம் சொரூபலக்கண நிலையில் கடவுளை கூறும் நாமம்,
1. பரமசிவம் 2. சிவபெருமான் 3. பதி 4. பிச்சாடனர்

23) ஆணவம் எனும் ஒரு மலத்தாற் பீடிக்கப்பட்ட ஆன்மாக்களை ,
1. சகலர் 2. பிரளயாகலர் 3.மூலமலம் 4. விஞ்ஞானகலர்

24) மயில்வாகனம் என்ற இயற்பெயரைக் கொண்டவர்,
1. ஆறுமுக நாவலர் 2. விபுலானந்தர்
3. விவேகானந்தர் 4. திருமூலர்

25) மதுரை தமிழ்ச்சங்கத்தால் 'மதங்கசூளாமணி' என்ற பெயரில் வெளியிடப்பட்ட நூலின் ஆசிரியர்
1. ஆறுமுகநாலர் 2. திருமூலர் 3. விபுலானந்தர் 4. விவேகானந்தர்

26) ஊனுடம்பில் இருந்து கொண்டு பிறவித்துன்பத்தை போக்கியவர்
1. சேர்ந்தனார் 2. விபுலானந்தர் 3. திருமூலர் 4. ஔவையார்

27) தமிழாகமம் என சிறப்பிக்கப்படும் நூல்
1. திருக்குறள் 2. வேதம் 3. ஆகமம் 4. திருமந்திரம்

28) பரம்பொருளாகிய ஸ்ரீகண்ட பரமேஸ்வரனிடத்தில் ஞான உபதேசம் பெற்றவர்,
1. திருந்தி தேவர் 2. பரஞ்சோதி முனிவர்
3. மெய்கண்ட தேவர் 4. அருணந்தி சிவர்ச்சாரியன்

29) தமது மூன்றாவது வயதில் பரஞ்சோதி முனிவரிடம் ஞான உபதேசம் கேட்ட சிறப்பிற்குரியவர்,
1. அருணந்தி சிவாச்சாரியர் 2. உமாபதி சிவாச்சாரியர்
3. மெய்கண்ட தேவர் 4. மறைஞான சம்மந்தர்

30) சகலாகம பண்டிதர் என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்,
1. மெய்கண்ட தேவர் 2. அருணந்தி சிவாச்சாரியார்
3. உமாபதி சிவாச்சாரியார் 4. மறைஞான சம்மந்தர்

31) நித்திய அன்னதானம் இடம் பெறும் ஆலயங்கள்,
1. நயினாதீவு, திருக்கேதீஸ்வரம் 2. சாந்தி,நல்லூர்
3. நயினாதீவு, செல்வச்சந்நதி 4. செல்வச்சந்நதி, மண்டூர்

32) யாருடைய சிந்தனையின் அடிப்படையில் சைவவித்தியா விருத்திச்சங்கம் உருவானது?
1. விபுலானந்தர் 2. விவேகானந்தர்
3. எ.்.ப.ஜி. பீரிஸூம் 4. நாவலர்

33) பிள்ளையார் கதையினுக்குரிய நூலாசிரியர்,
1. பாரதியார் 2. நம்பியாண்டார்நம்பி
3. வரதபண்டிதர் 4. சேக்கிழார்

34) வேடன் ஒருவன் வெற்றியடையும் பொருட்டு வெற்றிலைச்சடங்கு செய்த இடத்தில் அமைந்துள்ள ஆலயம்
1. நல்லூர் கந்தசுவாமி
2. களுதாவளை தேவாலயம்
3. கொக்கட்டிச்சோலை
4. நயினை நாகபூனணி அம்மன் ஆலயம்.



kalvi.lk

35) கோட்டை இராச்சியத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மன்னன்
1. ஆறாம் பராக்கிரமபாகு
2. சிங்கை பரராசசேகரன்
3. செண்பகம் பெருமாள்
4. இரகுநாத மாப்பாண முதலியார்

வினா இல 36 – 40 வரையான வினாக்களுக்கு கீழ்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| | |
|---|---|
| A. கொக்கட்டிச்சோலை | B. ஓட்டிசுட்டான் |
| C தான்தோன்றீச்சரம் | D. மானிப்பாய் |
| E வண்ணக்கர் | F சங்கமர் |
| G கம்பூகனார் | H வீராகமம் |
| I காரணாகமம் | J பத்ததி |

36) ஈழத்திலுள்ள தான்தோன்றீச்சரங்கள் அமைந்துள்ள இடங்களுடன் தொடர்புடைய தொகுதி
1. A B  2. B C  3. AD  4. BD

37) தான் தோன்றீச்சரமாகவும் திருப்படைக் கோயிலாகவும் விளங்குவது,
1. A  2.B  3.C  4. D

38) கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரர் ஆலய பூசைகளுடன் தொடர்புடைய ஆகமம்,
1. H  2. J  3. I  4. F

39) கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரர் ஆலய பரிபாலனத்தை மேற்கொள்பவர்
1. E  2. F  3. J  4.G

40) கொக்கட்டிச் சேலை தான்தோன்றீச்சர ஆலயத்தில் பூசைகளை மேற்கொள்பவர்
1.J  2. F  3.E  4. G

Education கல்வி අධ්‍යාපන

(40X1= 40 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1) சுருக்கமான விடை தருக.
   1. கடவுளுக்குரிய இருநிலைகளும் யாவை?
   2. மூவகை உயிர்களும் எவை?
   3. சிவலிங்கத்தின் வகைகளை தருக?
   4. பஞ்சபுராணம் ஓதும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் 4 இணைத் தருக.
   5. பெரியபுராணம் எத்தனை காண்டங்களைக் கொண்டது?
   6. திருக்கூட்டச்சிறப்பில் கூறப்படும் சிவனடியார் சிறப்புக்கள் 2 தருக.
   7. ஆலய உற்சவத்தின் முதலில் இரட்சாபந்தனம் முதலான கிரியைகள் இடம் பெறுவதற்கான காரணம் யாது?
   8. சிவஞான சித்தியாரின் 2 பகுதிகளும் எவை?
   9. அருணந்தி சிவாச்சாரியாரின் குருபூசை தினம் எது?
   10. உலகில் தமிழுக்கான முதலாவது பேராசிரியர் என்ற பெருமைக்குரியவர் யார்?

(10X2=20 புள்ளிகள்)



kalvi.lk

2) கீழ்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக. அதன் பொழிப்புரையையும் எழுதுக.

(அ) 'தந்தது உண்தன்னை கொண்டது ...........'
(ஆ) 'தண்ணளி வெண்குடை வேந்தன் ............'
(இ) 'விநாயகனே வெவ்வினையை வேறுக்க............'
(ஈ) 'மீளா அடிமை உமக்கே ..............'

(10 புள்ளிகள்)

3) ''வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்று உன்னுக''
i. வேதம் என்பதன் மறுபெயர்கள் இரண்டினைத்தந்து அதற்கான காரணத்தையும் குறிப்பிடுக.
ii. வேதத்தின் நான்கு பகுதிகளையும் குறிப்பிடுக.
iii. யசுர்வேதம், அதர்வண வேதம் எவற்றைக் கூறுகின்றன?

( 10 புள்ளிகள்)

4) ''திருவிழாக்கள் ஊர்மக்களை ஒன்று சேர்க்கின்றன''
1. ஆலயங்களில் தினமும் இடம்பெறும் ஆறுகாலப்பூசைகளையும் குறிப்பிடுக.
2. கொடியேற்றத்திருவிழா எதனை உணர்த்துகிறது?
3. இறைவனின் ஐந்தொழில்களையும் குறிப்பிட்டு அதற்கான மகோற்சவத்தினையும் குறிப்பிடுக

(10 புள்ளிகள்)

5) '' சைவசித்தாந்தம் முப்பொருள்களை விளக்குகிறது''
1. சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களையும் தருக?
2. ஆன்மாக்கள் பக்குவநிலையை அடையும் போது இருவினை ஒப்பு நிலையை அடைகின்றன. இருவினை ஒப்பு நிலை எனப்படுவது யாது?
3. ஆன்மாக்களின் மூன்று வகைகளையும் தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

6) ''திருமூலர் இலங்கையை சிவபூமி என குறிப்பிட்டார்''
1. பூர்வீக இலங்கையில் சைவத்தை நிலைபெறச் செய்தவர்கள் யாவர்?
2. இலங்கையில் நூறுதிரிகள் ஏற்றக்கூடிய கல்விளக்கு எவ்வாலயத்தில் காணப்படுகின்றது?
3. இலங்கையில் நாகர்களால் அமைக்கபெற்றவை என கூறப்படும் சிவாலயங்கள் ஐந்து தருக.

( 10 புள்ளிகள்)

7) எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பெழுதுக.
1. வைரவர் வழிபாடு
2. குரு வழிபாடு
3. சந்தான குரவர்
4. திலகவதியார் ( 10 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

ONLINE CLASSES - 2025

# May NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**